தனியார் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் சென்னை -06.

முன்னிலை: முனைவர். பெ.குப்புசாமி.

ந.க.எண். 5458-1 / B3/2025. நாள். 16.12.2025.

பொருள்: பள்ளிக் கல்வி - தனியார் பள்ளிகள் - **பள்ளிகள் மற்றும் மாணவர் பாதுகாப்பு சார்ந்த பொது அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் வழங்குதல்** - சார்ந்து

-----------

பள்ளிக் கல்வித்துறை, தனியார்பள்ளிகள் இயக்ககத்தின்கீழ் தமிழ்நாட்டில் இயங்கிவரும் அனைத்து தனியார் பள்ளிகளிலும் மாணவர்களின் நற்பண்புகள் மற்றும் செயல்பாடுகளை ஆக்கப்பூர்வமாக வழிநடத்திட நன்னெறி கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் சார்ந்த பொது அறிவுரைகள், மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை, அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் எடுத்துரைத்து அதன்படி நடக்க பள்ளிகளுக்கு அறிவுறுத்த அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளிகள்) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. **பள்ளி காலை வணக்கம்:**

தினமும் காலம் தவறாமல் காலை வணக்கக் கூட்டம் நடத்தும்போது, விளையாட்டு மைதானத்தில், அனைத்து மாணவர்களையும் வரிசையாக அவர்களின் உயரங்களின் அடிப்படையில் நிற்கவைத்து, தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண் ஆகியவற்றை மாணவர்களைக் கொண்டு பாடவைக்க வேண்டும். ஒலிபெருக்கியை பயன்படுத்தி பாடல்களை ஒலிபரப்பக் கூடாது.

அனைத்துவகை பள்ளிகளிலும் பின்பற்றப்படும் காலை வணக்கக் கூட்ட முறைகளையே (திருக்குறள், பழமொழி, பொன்மொழி, பொதுஅறிவு குறித்த செய்திகள்) பின்பற்றி அன்றையதின செய்தித்தாள்களில் வெளியாகும் முக்கிய நிகழ்வுகளான கல்வித்துறை, அறிவியல் சார்ந்த சாதனைகள், தேர்வு அட்டவணை வெளியீட்டு அறிக்கை, மாணவர்களின் சாதனைகள், விளையாட்டு சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் மாவட்ட, மாநிலம் சார்ந்த நிகழ்ச்சிகளை மாணவர்கள் அறியும் வண்ணம் வாசிக்க வேண்டும். திருக்குறள், ஆசிரியர் அறிவுரை, பிறந்தநாள் வாழ்த்து ஆகிய நிகழ்ச்சிகளும் தவறாமல் இடம்பெற வேண்டும்.

மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பள்ளியளவில், வகுப்பு வாரியாக நன்னடத்தை, கல்வியில் சிறந்த அதிக மதிப்பெண் பெறுபவர்கள், விளையாட்டில் சிறந்து

விளங்கும் மாணவர்களை அறிமுகப்படுத்தி, சிறப்புப் பரிசுகள் வழங்கி, மற்ற மாணவர்களுக்கும் உற்சாகம் அளிக்கும் வகையில் நடத்த வேண்டும்.

முக்கியமாக மாணவர்கள் காலைவணக்கக் கூட்டம் முடிந்தவுடன் அந்தந்த வகுப்பாசிரியர்கள் துணையுடன் வரிசையாக வகுப்பறைகளுக்குச் செல்வதை உறுதிசெய்ய வேண்டும். மாடிப்படிகளில் ஏறும்போது மாணவர்களின் பாதுகாப்பை கவனிக்க வேண்டும்.

பள்ளி மாணவர்களிடையே சாதி மற்றும் சமுக வேறுபாடு உணர்வுகள் கருத்து வேறுபாடுகள் இல்லாமல் நல்லிணக்கம் மற்றும் நற்பண்புகளை வளர்ப்பது குறித்து ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.

2. **பள்ளி அல்லது தனியார் பேருந்து:**

பள்ளி அல்லது வெளி பேருந்துகளில் மாணவர்கள் பள்ளிக்கு வருவதனால், அப்பேருந்துகள் முறையான (ஆண்டுதோறும்) அங்கீகாரம், பாதுகாப்பு விதிகளுக்குட்பட்ட வசதிகள் பெற்றிருப்பதையும், வேகக்கடுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்டிருத்தல், சன்னல்கள் (சிறிய இடைவெளியுடன் கம்பிகள் பொருத்தப்பட்டிருத்தல்), கதவு ஆகியவை உரிய முறையில் பராமரிப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

பள்ளி பேருந்துகளில் மாணவர்களை உரிய பாதுகாப்புடன் அழைத்து செல்ல வேண்டும். சாலையில் இறங்கி இங்கும் அங்குமாக ஓடாமல் உதவியாளர் துணையுடன் வகுப்பறை வரை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து வாகனங்களிலும் பெண் உதவியாளர் இருக்க வேண்டும். மாணவர்கள் காலையில் பள்ளி வளாகத்திற்குள், இறக்கி விடப்படுவதையும் மாலையில் மீண்டும் ஏற்றிச் செல்வதையும் கண்காணிக்க வேண்டும். இதனால் மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். மாணவர்கள் பேருந்தில் கதவருகில் நிற்காமல் இருக்கையில் அமரச்செய்தல் அவசியம். அனைத்து பள்ளி பேருந்துகளிலும் ஒலிப்பதிவு வசதியுடன்கூடிய கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட வேண்டும்.

பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை மிதிவண்டி அல்லது இருசக்கர வாகனங்களில் அழைத்துவரும்போது, பின்புற இருக்கையில் இருவருக்குமேல் அமரவைப்பதை தவிர்த்து குழந்தைகளின் பாதுகாப்பை கவனித்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்களை உடல் ரீதியாகவோ மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் (ஆசிரியர்கள், முதல்வர்கள், பள்ளி நிர்வாகத்தினர்) செய்யக்கூடாது.

3. வகுப்புகள் நடத்துதல்: (கல்விசார் மற்றும் கல்வி இணைசெயல்பாடுகள் ) (Curricular and Extra curricular)

பள்ளி நிருவாகம், அவரவர் ஆளுகைக்குட்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் மரியாதையுடனும் சமமாகவும், பள்ளியின் ஒரு அங்கமாகவும் கருதி அவர்களுக்கு உற்சாகமளிக்கும் விதமாக நடத்த வேண்டும்.

மேலும் பள்ளிகளில் ஆசிரியர்கள் கற்பித்தல் துணைக் கருவிகளைக் கொண்டு மாணவர்களுக்கு அனைத்து பாடங்களையும் நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும். இதன்வாயிலாக கற்றல் கற்பித்தல் நிகழ்வு சிறப்பானதாக அமையும்.

ஒவ்வொரு வகுப்பிலும் தரத்தில், ஒழுக்கத்தில், ஆர்வத்தில், வாசிப்பதில், பொது அறிவில்,, தனிப்பட்ட பாடத்தில், கதை கவிதை எழுதுவதில் சிறந்தவர்களை அடையாளம் காணும் சிறந்த தளமாக வகுப்பறை அமைய வேண்டும்.

**ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நிருவாகப் பணியாளர்கள் சார்ந்து**

**1. ஆசிரியர்கள் தொடர்பாக:**

- வகுப்புகள் நேரத்திற்கு துவங்கப்பட வேண்டும்.
- பாடத்திட்டம் திட்டமிட்டபடி தேர்வுக் காலத்திற்குள், முடித்து கடைசிநேர உந்துதலை தவிர்க்க வேண்டும்.
- மாணவர்களின் வருகைப் பதிவுகளை முறையாக பராமரிக்க வேண்டும்.
- மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் நற்பண்புகள் குறித்த வளர்ச்சிக்கான வழிகாட்டல்களை பற்றி எடுத்துரைக்க வேண்டும்.
- அரசின் நலதிட்டங்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்து வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்திக்கொள்ள உதவ வேண்டும்.
- பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான அனைத்து போட்டிகளிலும் மாணவர்கள் கலந்துகொள்ள அறிவுறுத்தி கலந்துகொள்ள உதவி செய்திட வேண்டும்.

**2. மாணவர்கள் தொடர்பாக: ( அறிவுறுத்தல்)**

- அனைத்து மாணவர்களும் தினசரி முறையான பள்ளி சீருடையில் வரவேண்டும்.
- அனைத்து வகுப்புகளிலும் ஒழுக்கத்துடனும் முழு ஈடுபாட்டுடனும் கலந்து கொள்ள வேண்டும்.
- குப்பைகளை வகுப்பறை மற்றும் பள்ளி வளாகத்தில் வீசாமல், குப்பைத் தொட்டயில் போடும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
- வயதில் பெரியவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மரியாதை அளிக்க வேண்டும்.
- தேர்வுகளுக்கான தயாரிப்புகளை முன்னதாக தொடங்கி கடைசி நேர தயாரிப்பை தவிர்க்க வேண்டும்.

- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான பொதுத்தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு மாணவரும் அவ்வட்டவணையை வீடு மற்றும் பள்ளி வகுப்பறையில் (large font size) ஒட்டி தினமும் தேர்வுக்கான தாயாரிப்புகளை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும்.
- ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய கால அளவினை (varies from person to person) ஒதுக்கி அட்டவணை வடிவமைத்து அதன்படி தேர்வுகால தாயாரிப்புகளை தொடங்க அறிவுறுத்த வேண்டும்.
- அனைத்து பாடங்களுக்கும் Equal Importance அளிக்க வேண்டும்.
- தேர்வு அட்டவணை பள்ளி அறிவிப்பு பலகையில் ஒட்டப்படுதல் வேண்டும்
- தேர்வின்போது ஒழுங்கு காக்கப்பட வேண்டும்.
- தவறான செயல்களில் ஈடுபடுபவர்கள் கடுமையாகப் பரிசீலிக்கப்படுவார்கள்.

3.பள்ளி நிருவாகம்:

- அனைத்து அலுவல் பதிவுகளும் சரியாக பராமரிக்கப்பட வேண்டும்.
- பள்ளி உபகரணங்கள் சரியான நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.
- பெற்றோர் - ஆசிரியர் கூட்டங்கள் (Parent Teachers Meeting) மாதாந்திரம் நடத்தப்பட வேண்டும்.
- ஆசிரிய - மாணவர்கள் வகுப்பறை உறவுகள் குறித்த தெளிவான நெறிமுறைகளை பெற்றோர்களுக்கு வழங்க வேண்டும்.
- பெற்றோர்கள், ஆசிரியர்களை பற்றிய நேர்மறையான எண்ணத்தை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் எடுத்துரைக்கச்செய்து நல்ல மாணவர்களாகவும், நாட்டின் வருங்காலத் தூண்களாகவும் விளங்கச் செய்ய வேண்டும்.
- மாணவர்களின் பள்ளி அளவிலான தேர்வுகளுக்கான விடைத்தாள்களை வழங்கும்போது மதிப்பெண் குறைவாக எடுத்த மாணவர்கள் மனம் வருத்தமடையா வண்ணம், உளவியல் முறையில் அணுகி, இனிவரும் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கான வழிமுறைகளை பெற்றோர்களுக்கு எடுத்து விளக்க வேண்டும்.

4. சிறப்பு வகுப்புகள்:

விடுமுறை நாள்களில் சிறப்பு வகுப்புகள் என்ற பெயரில் மாணவர்களைப் பள்ளிக்கு வரவழைத்து பள்ளி நடத்தக் கூடாது. பருவமழைக் காலங்களில், பள்ளி வேலை நாட்களில் மாணவர்களை மிகவும் பாதுகாப்பாக பள்ளிகளில் அமர வைக்க வேண்டும்.

உரிய அனுமதியுடன், தேர்வு நேரங்கள் மற்றும் தேவைப்படும் நேரங்களில் மட்டும் தேவைப்படும் மாணவர்களுக்கு உரிய பாதுகாப்புடன் சிறப்பு வகுப்புகள் நடத்த மாவட்டக்கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) பரிசீலித்து அனுமதிக்கலாம்.

5. **விழா நடத்துதல்:**

பள்ளிகளில் பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு விழா, உணவுத்திருவிழா போன்ற அனைத்து விழாக்களையும் ஒவ்வொரு ஆணடும் டிசம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்க வேண்டும். பள்ளிகளில் எந்த ஒரு விழா, நிகழ்வுகள் நடத்தினாலும் துறையின் உரிய அனுமதி பெற்று நடத்த வேண்டும். மதம் சார்ந்த விழாக்கள் நடத்தக் கூடாது.

அனைத்து மாணவர்களும் அனைத்து நிலைகளிலும் பங்கேற்கும் வண்ணம் நிகழ்ச்சிகள் நடத்துவது மாணவர்களிடையே நல்லிணக்கம், உற்சாகம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக அமையும்

விழா தொடர்பான நிகழ்ச்சி நிரல் மற்றும் அழைப்பிதழ்களை முறையாக அனைத்து பெற்றோர்களும் அறியும் வகையில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்தி அவர்கள் அனுமதியுடன் மாணவர்களை விழா அல்லது நிகழ்ச்சிகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும்.

பள்ளி சொத்துகளை கல்விசாராத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது. மேலும் கலையரங்குகள், வகுப்பறைகள் விளையாட்டு மைதானங்கள் அல்லது திறந்தவெளியில் மாணவர்களை ஒருமைப்படுத்தி துறை சாராமல் நடத்தப்படும் ஒத்திகைகள், அணி வகுப்புகள் அல்லது வகுப்புவாத, சாதி , மதம் சார்ந்த செய்திகள் பரப்புதல் மற்றும் விழா நடத்துதல் போன்றவை பள்ளி வளாகங்களில் நடத்தக் கூடாது.

பள்ளிகளில் உள்ள மகிழ் மன்ற குழுக்களின் மாணவர் குழுத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குழு சார்ந்த அனைத்து செயல்பாடுகளிலும் சமூக நீதி பண்புகளை வளர்க்கும் வகையில் மேற்கொள்ளவேண்டும்.

மாணவர்களை உடல் ரீதியாகவோ உளவியல் முறையிலோ எவ்வித துன்புறுத்தலும் (ஆசிரியர்கள், முதல்வர்கள், பள்ளி நிர்வாகத்தினர்) செய்யக்கூடாது.

வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள நீர்நிலை சார்ந்த பகுதிகளுக்கு பாதுகாப்பின்றி செல்லக் கூடாது என மாணவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

துறையின் அனுமதி பெறாமல் ,மாணவர்களை கல்விச் சுற்றுலா என்ற பெயரில் எந்த ஒரு இடத்திற்கும் அதாவது மாவட்டம், மாநிலத்திற்கு உள்ளாகவோ மாநிலத்திற்கு வெளியேவோ அழைத்துச் செல்லக் கூடாது. துறையின் அனுமதியின்றி அழைத்து சென்று ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் பள்ளி நிருவாகமே முழுபொறுப்பு ஏற்க நேரிடும்.

6. **பள்ளி கமிட்டி கூட்டம்**

இக்கமிட்டியில் பள்ளியின் தாளாளர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழு கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தவேண்டும். ஏழு நாட்களுக்கு முன்பு உறுப்பினர்களுக்கு அறிவிப்பு வழங்கவேண்டும். குறைந்தபட்சம் 50 சதவீதம் உறுப்பினர்கள் பங்குபெற வேண்டும். கூட்டப்பொருள் 15 நாள்களுக்குள் மாவட்டக்கல்வி அலுவலர் (த.ப) அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

7. **தனி அலுவலர் நியமனம்**

இவர் பள்ளி கமிட்டி கூட்டத்தின் செயலராக, பள்ளியின் அனைத்து செயல்பாடுகளையும் கவனிக்க வேண்டும்.

8. **கண்காணிப்பு கேமரா**

பள்ளியில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வகுப்பறைகள் மற்றும் மாணவர்கள் நடமாடும் அனைத்து இடங்களிலும், (கழிவறை தவிர) நுழைவாயில், மாணவர்கள் வெளியேறும் வாயில்கள், பள்ளி வளாகத்தில் உள்ள அனைத்து பாதைகள், படிக்கட்டுகள், நூலகங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானம், மாணவர் கைக்கழுவும் இடம், பள்ளி வாகனம் ஆகிய அனைத்து இடங்களிலும் ஒலிப்பதிவு வசதியுடன்கூடிய கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும்.

பள்ளி கட்டடத்தின் மொட்டை மாடிக்கு செல்லும் வழி தடைசெய்யப்பட்டிருப்பதுடன் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருக்கவும் வேண்டும்.

வீடியோ பதிவுகள் இரண்டு மாதங்களுக்கு பார்வையிடும் வகையில் இருக்க வேண்டும்.

9. **பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் நடத்துதல்**

பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள்

1. பள்ளி முதல்வர்
2. பள்ளி ஆசிரியர்
3. மாணவர்களின் பெற்றோர்கள்
4. சமுக ஆர்வலர்
5. பள்ளி கமிட்டி பிரதிநிதி 1
6. ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்
7. முன்னாள் மாணவர்கள்

பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் அனைவரும் பள்ளியின் அனைத்துவிதமான செயல்பாடுகளிலும் ஈடுபாட்டுடன் இருக்கும் நிலையை உருவாக்க வேண்டும். பள்ளியில் நடைபெறும் அனைத்து விழாக்கள், நிகழ்வுகள், கூட்டங்கள் அகியவற்றில் இவர்களின் பங்களிப்பை உறுதிசெய்ய வேண்டும்.

அ) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO)

பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்க தேவையான வழிமுறைகள்.

குழந்தைகளுக்கு, பாதுகாப்பான தொடுதல் (Good Touch) மற்றும் பாதுகாப்பற்ற தொடுதல் (Bad Touch) குறித்து பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டத்தில் விளக்கிக்கூறி பாலியல் தொந்தரவுகள் மற்றும் அத்தீங்குகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது குறித்து பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது.

பாலியல் துன்புறுத்தல் குறித்து நம்பிக்கையானவர்களிடம் தெரிவிப்பது மற்றும் அதுகுறித்துப் புகாரளிப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஆசிரியர்கள் வாயிலாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஏற்படுத்துவது.

மாணவர்களிடையே ஏற்படும் நடத்தை மாற்றங்களை கண்காணித்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மேற்கொள்ள வேண்டும்.

பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் (Teaching) மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் (Non teaching) அனைவருக்கும் ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது தேவைப்படின் குறிப்பிட்ட கால இடைவெளியில் POCSO சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

ஆ) உள் புகார் குழு (Internal Compliance Committee - ICC)

பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை) Act. 2013 (The Sexual Harrassment of Women at Workplace (Prevention. Prohibition and Redressal) Act. 2013) அடிப்படையில் ஆண், பெண் இருவரும் இணைந்து பணி செய்யும் இடங்களில் உள்புகார் குழு (Internal Compliant Committee ICC) ஒன்று பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இருப்பதைப்போல் பள்ளி அளவில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் அனைத்து வகையான தனியார் பள்ளிகளிலும் இருக்க வேண்டும்.

இ) பள்ளிக் கல்வி தகவல் மைய எண் 14417, (Toll Free Number)

அரசின் நலத்திட்டங்கள்.பாடத் திட்டங்கள், தேர்வு முறைகள் மற்றும் மேற்படிப்பு சார்ந்த விவரங்கள், வளரிளம் பருவத்தினருக்கான மனம் , உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தல்களுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும்போதும், பாதுகாப்பற்ற நிலையில் உள்ளபோதும் , தேர்வுக்காக தயார்ப்படுத்துதல், தேர்வை எதிர்கொள்வது மற்றும் தேர்வு முடிவுகள் குறித்த பயத்தைப் போக்குதல் போன்ற தகவல்கள் மற்றும் தன் பாதுகாப்பு சார்ந்த ஆலோசனைகளை 14417 என்ற இலவச உதவி எண் வாயிலாக ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அறிந்துகொள்ள முடியும். இவ்விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும் என்பது குறித்து பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் அவசியம் எடுத்துரைக்க வேண்டும்.

குழந்தைகள் உதவி எண் 1098 (Toll Free Number)

குழந்தைகள் நலன், பாதுகாப்பு. குழந்தைத் திருமணங்கள் தடுப்பு, குழந்தை தொழிலாளர் பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படும்போது, உடல், மனம் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாகும் போதும் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும் போதும் அது சார்ந்த சந்தேகங்கள் மற்றும் தகவல் அளித்திட 1098 என்ற குழந்தைகள் உதவி மைய எண்ணை தொடர்பு கொள்ளலாம் எனவும், இவ்விவரங்கள் பிறருக்கத் தெரியாமல் பாதுகாக்கப்படும் என்கிற விழிப்புணர்வையும் ஆசிரியர்கள். மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

மகளிர் உதவி எண் 181 (Toll Free Number)

மகளிர் நலன், பாதுகாப்பு, சந்தேகங்கள் மற்றும் தகவல் அளித்திட 181 என்ற மகளிர் உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்ற விழிப்புணர்வையும் ஆசிரியர்கள். மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஏற்படுத்தலாம்

மேற்காண் உதவி எண்களை பள்ளி வளாகம், மக்கள் கூடும் பொது இடங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் காட்சிப்படுத்த பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தலாம்.

ஈ) மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு (Student Safeguarding Advisory committee)

பள்ளி அளவிலான பாதுகாப்பு ஆலோசனை குழு, பின்வரும் உறுப்பினர்களை கொண்டு செயல்பட வேண்டும். ஆண்டுதோறும் இக்குழுவில் 50% உறுப்பினர்கள் மாற்றி

அமைக்கப்பட வேண்டும். இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இக்குழு உறுப்பினர்கள் முழுமையாக திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

பள்ளி அளவிலான குழுவில்

- தலைமை ஆசிரியர்
- ஆசிரியர்கள் -2
- பெற்றோர் ஆசிரியர் கழகம் / பெற்றோர் உறுப்பினர்-2
- பள்ளி மேலாண்மை குழு பிரதிநிதி 1
- ஆசிரியரல்லா பணியாளர்
- வெளி நபர் (தேவை எனில்)-1

இக்கூட்டத்தில் மாணவர் மனசு பெட்டியின் மூலம் பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விவாதித்து தீர்மானம் ஏற்றிடல் வேண்டும்.

அனைத்து தனியார் உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளில் 9,10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் ( Career Guidance) சரர்ந்த விழிப்புணர்வு எற்படுத்தும் பொருட்டு ஒரு பொறுப்பு ஆசிரியரை நியமித்து அவர் குறித்த விவரங்களை பெற்றோருக்கு வழங்கி மாணவர்கள் பயனடையச் செய்தல் வேண்டும்.

**இணையதள** பாதுகாப்பு (Cyber Security) மாணவர்கள் இணையதளத்தில் உள்ள தகவல்களை பாதுகாப்பாக கையாளுவது மற்றும் இணையதள பாலியல் வன்முறைகளை தவிர்ப்பது சார்ந்தும் பின்வருமாறு அறிவுறுத்த வேண்டும்.

- இணையதளத்தில் பகிரும் தகவல்களில் கவனமாக இருக்க வேண்டும், வலுவான கடவுச்சொற்களைப் பயன்படுத்த வேண்டும், தெரியாத நபர்களுடன் ஆன்லைனில் உரையாடுவதைத் தவிர்க்க வேண்டும், சந்தேகத்திற்கிடமான இணைப்புகளை க்ளிக் செய்யக்கூடாது, மற்றும் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டும்.
- **தகவல்களைப் பகிரும்போது எச்சரிக்கை:** உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி எண், பள்ளி போன்ற தனிப்பட்ட தகவல்களை ஆன்லைனில் யாரிடமும் பகிர வேண்டாம்.
- **வலுவான கடவுச்சொற்கள்:** (Password) உங்கள் கணக்குகளுக்கு (Account) வலுவான மற்றும் ஊகிக்க முடியாத கடவுச்சொற்களைப் பயன்படுத்துங்கள். அவற்றை யாரிடமும் பகிர வேண்டாம்.
- **தெரியாத நபர்களுடன் எச்சரிக்கை:** ஆன்லைனில் பழகும் நண்பர்களைப் பற்றி பெற்றோர் அல்லது பெரியவர்களுடன் பேசுங்கள். உங்களுக்கு

அறிமுகமில்லாதவர்கள் அனுப்பும் செய்திகள் மற்றும் இணைப்புகளைத் திறக்க வேண்டாம்.

- **பிரச்சினைகளை பெற்றோரிடம் கூறுங்கள்**: ஆன்லைனில் ஏதேனும் சங்கடமான அல்லது பயமாகத் தோன்றினால், உடனடியாக உங்கள் பெற்றோர் அல்லது நம்பிக்கைக்குரிய பெரியவரிடம் சொல்லுங்கள்.

- **தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு**: இணையத்தில் நீங்கள் உருவாக்கும் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றிப் புரிந்து கொள்ளுங்கள். சில வலைத்தளங்கள் உங்கள் தகவல்களை சேகரித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

- **சைபர் கிரைம் பற்றி விழிப்புணர்வு**: ஹேக்கிங், ஆன்லைன் மோசடி, அடையாள திருட்டு போன்ற சைபர் குற்றங்கள் பற்றி குழந்தைகளுக்கு விளக்கிக் கூற வேண்டும்

**• மேற்கூறிய அனைத்தும் மாணவர்களுக்குரியவை. ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மாணவர்களுக்கு எடுத்துரைக் வேண்டியவையாகும்.**

**உ) மாணவர்களின் நலவாழ்வு**

ஒவ்வொரு பள்ளி மற்றும் விடுதியிலும் முதலுதவிப் பெட்டி (First Aid Box), இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

- பள்ளி வகுப்பறை சுத்தம், மாணவர்களின் தன்சுத்தம், சுற்றப்புறச் சுத்தம், கழிவறை, கை அலம்பும் இடங்கள் சுத்தம் பேணுதல் ஆகியவை முக்கியமான நலன்காக்கும் சுகாதார காரணிகளாகும்.
- காலை, மதிய உணவு இடைவேளைகளின்போது கைகளை சத்தம் செய்தல், முறையான, ஆரோக்கியமான பழம் மற்றும் உணவு வகைகளை மாணவர்கள் உண்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வாரம் கொசு ஒழிப்பு சார்ந்து பள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிம், மாணவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக தொடர்புடைய ஆரம்ப சுகாதார நிலைய (PHC) மருத்துவ அதிகாரி அல்லது சுகாதார ஆய்வாளருக்கு தகவல் அளிப்பது குறித்தும் விளக்க வேண்டும். அவர்களின் உதவி எண்கள் அனைவரும் அறியும்வகையில் (அறிவிப்புப் பலகையில்) வெளிப்படையாக வைக்கவேண்டும்.

- மாணவர்களிடம் கொசுக்களின் வளர்ச்சி larva, pupa மற்றும் adult vector mosquito ஆகியவைகளின் முழுமையான வளர்ச்சி நிலைகளை விளக்கி,, அம்மாணவர்கள் "சுகாதார தூதர்கள்" ஆக இருந்து, மக்களிடம் தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) செயல்பாடுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- பள்ளி வளாகங்களை சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- குடிப்பதற்காக காய்ச்சிய நீரை மட்டும் பயன்படுத்த வேண்டும்.
- மாணவர்களின் சரிவிகித உணவு உட்கொள்ளல் சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

8. **ஆசிரியர்கள் பாதுகாப்பு மற்றும் நலன்**

பள்ளியின் மொத்த நலன் என்பது ஆசிரியர்கள், மாணவர்கள், பள்ளி முதல்வர் ஆசிரியரல்லா பணியாளர்கள், நிருவாகம் உட்பட்ட அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பினால் உருவாவது ஆகும். எனவே பள்ளியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் நலனையும் காத்து அவர்களுக்கு மரியாதையளித்து ஊக்கவிக்க வேண்டும்.

9. **பள்ளி கட்டட பாதுகாப்பு**

பள்ளி வளாகத்தில் கட்டட பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெறும் இடங்களில் பள்ளங்களைச் சுற்றி பாதுகாப்பு தடுப்பு அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டும்.

பள்ளி கட்டடத்தின் மேற்கூரை, கைப்பிடிச் சுவர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மற்றும் சன்னல் கதவுகள் உறுதித்தன்மையை அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும்.மேற்கூரையில் நீர் தேங்காமல் வெளியேற்ற வேண்டும்.

மாடிகளில் உள்ள கைப்பிடிச் சுவர்கள் உயரமானதாகவும், கம்பிவலைகள் பொருத்தப்பட்டுள்ளதையும் உறுதி செய்து மாணவர்கள் நலன் காக்கவேண்டும். வெளியில் எட்டிப்பார்ப்பதையோ வெளிவர முயர்ச்சிப்பதையோ தவிர்க்கும் வகையில் பாதுகாப்பை முறைபடுத்த வேண்டும்.

மொட்டை மாடிகளுக்கு செல்லும் வழியை மாணவர்கள் பயன்படுத்தாவண்ணம் அடைத்து பூட்டி வைக்கவேண்டும். பள்ளியில் எந்த இடத்திலும் மாணவர்கள் சுவர் ஏறி, மேலிருந்து கீழாகவோ அல்லது பக்கத்திலோ குதிக்காவண்ணம் மிக கவனத்துடன் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பொதுவான அறிவுரைகள்

- மரக்கன்றுகள் நடுதல், மழை நீர் சேமிப்பு மற்றும் பசுமை தமிழ்நாடு போன்ற சுற்றுச் சூழல்பாதுகாப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் மாணவர்கள் கலந்து கொள்ள அறிவுறுத்த வேண்டும்.
- குடிநீர்த்தொட்டி போதிய கால இடைவெளியில் நன்கு சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளி வளாகத்தில் மூடப்படாத கிணறுகள் இருப்பின் உடனடியாக மூடப்பட வேண்டும்.
- அறுந்த ஒயர்கள், விழக்கூடிய நிலையில் மரங்கள் எதேனும் இருப்பின் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்
- "சுத்தம் - பாதுகாப்பு - ஒழுக்கம்" என்ற பள்ளி கோட்பாட்டை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

மேற்காணும் அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளை தனியார் பள்ளிகளில் கடைபிடிக்கவும் இப்பொருள் குறித்து பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் விவாதிக்கவும் பள்ளி முதல்வர், மற்றும் ஆசிரியர்களுக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கிட அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்களும் (தனியார் பள்ளிகள்) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இயக்குநர், தனியார் பள்ளிகள்

16/12/2024

பெறுநர் :அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(த.ப)